[பேரவைத் தலைவர்][2022 அக்டோபர் 17

## (V) திரு. கோடியேரி பாலகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் மூத்த தலைவர் அவர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சி.பி.ஐ.(எம்.) கட்சியின் தலைமைக் குழு உறுப்பினரும், மூன்று முறை அக்கட்சியின் மாநிலச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவருமான திரு. கோடியேரி பாலகிருஷ்ணன் அவர்கள் 1–10–2022 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

*கொள்கை உறுதிமிக்க தலைவராக விளங்கிய தோழர் கோடியேரி பாலகிருஷ்ணன் அவர்கள் 1975 ஆம் ஆண்டு நெருக்கடி நிலையின்போது மிசா சட்டத்தின்கீழ் சிறை தண்டனை அனுபவித்தவர். மேலும், அவர் கேரள மாநிலத்தின் அமைச்சராகவும் சிறப்புறப் பணியாற்றியவர்.*

*அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.*

## (Vi) திரு. முலாயம் சிங், உத்தரப்பிரதேச மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உத்தரப்பிரதேச மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சரும், சமாஜ்வாடி கட்சியின் மூத்த தலைவருமான திரு. முலாயம் சிங் யாதவ் அவர்கள் 10–10–2022 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

*இந்திய அரசியலில் முதுபெரும் தலைவர்களில் ஒருவரான திரு. முலாயம் சிங் யாதவ் அவர்கள் 3 முறை உத்தரப்பிரதேச மாநிலத்தின் முதலமைச்சராகவும், 10 முறை சட்டமன்ற உறுப்பினராகவும், 7 முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் மற்றும் ஒன்றிய அமைச்சராகவும் பணியாற்றியவர். மதச்சார்பற்ற கொள்கைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டிற்காக போராடிய மிக உயர்ந்த தலைவர்களில் ஒருவராவார்.*